சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்,
நாள்.23.01.2023

# <u>அவசரக் கூட்டம்</u>

திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம் தை மாதம் 11-ஆம் நாள் ஜனவரி திங்கள், நாள்.25.01.2023, புதன் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி நகர்மன்ற அவசரக் கூட்டம் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் தெரிவித்துள்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்,
சின்னமனூர் நகராட்சி.

<u>**கூட்டப்பொருள்**</u>

| | |
|---|---|
| **பொருள் எண்.1**<br>சின்னமனூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் டிசம்பர்/2022 ஆம் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கம் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** :- | **மன்றம் பதிவு செய்யலாம்** |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 334, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | பதிவு செய்யப்பட்டது. |
| ******* | |
| **பொருள் எண் .2**<br>சின்னமனூர் நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர்/2022 ஆம் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கம் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** :- | **மன்றம் பதிவு செய்யலாம்** |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 335, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | பதிவு செய்யப்பட்டது. |
| ******* | |
| **பொருள் எண்.3**<br>சின்னமனூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஒரு பகுதியாக வீடு வீடாக குப்பை பிரித்து வாங்கும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்படும் இரண்டாம் நிலை சேகரிப்பு வாகனமான TN 60 V 8239 டிப்பர் லாரிக்கு பொருத்தப்பட வேண்டிய புதிய டயர்கள் (6 எண்ணம்) வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.80,000/- (ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** :- | மன்றம் அனுமதிக்கலாம் **ந.க.எண்.0028/2023/எச்1** |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 336, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |
| **பொருள் எண்.4**<br>சின்னமனூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் | |

| | |
|---|---|
| பணியில் ஒரு பகுதியாக வீடு வீடாக குப்பை பிரித்து வாங்கும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்படும் இரண்டாம் நிலை சேகரிப்பு வாகனமான TN 60 AW 6753 TATA ACE வாகனத்தின் பழுது நீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** :- | மன்றம் அனுமதிக்கலாம் **ந.க.எண்.0035/2023/எச்1** |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 337, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |
| **பொருள் எண்.5**<br>சின்னமனூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் டெங்கு நோய் தடுப்பு பணியில் ஈடுபடும் களப்பணியாளர்கள் (DBC) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்து ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க கோரப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனியார் மூலம் இந்நகர்மன்ற தீர்மான எண்.317 நாள்.30.12.2022ல் ஒப்பந்த காலம் 05.02.2023ன்படி ஒப்பந்த அனுமதி பெறப்பட்டுள்ளது. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி கணக்கெடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணியினை ஏற்கனவே உள்ள ஒப்பந்த விகிதத்திலேயே ஒப்பந்தப் பணி மேற்கொள்ளும் திரு.R.பரமானந்தன் ஒப்பந்ததாரர் என்பவர் மூலமாக மேலும் 28.02.2023 முடிய ஒரு மாதம் நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மன்றம் அனுமதிக்கலாம்<br>2.பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்த பணியினை ஒரு மாதம் நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்காக. **ந.க.எண்.1468/2020/எச்1** |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 338, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட தெருவோர கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு (2023-2024 முதல் 2025-2026 முடிய மூன்றாண்டு காலத்திற்கு) முதலாமாண்டான 2023-2024ம் ஆண்டிற்கு 19.01.2023 ஆம் நாளன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், பொது ஏலம் கோரி யாரும் பொறுப்புத் தொகை செலுத்தவில்லை. கீழ்க்கண்ட விவரப்படியான இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி தாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | எம்.பால்பாண்டி,<br>பண்ணைப்பட்டி<br>உசிலம்பட்டி போஸ்ட் | 500000/-<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 2 | கே.ராம்குமார்<br>பண்ணைப்பட்டி<br>உசிலம்பட்டி போஸ்ட் | 550000/-<br>(ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட தெருவோரக் கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.கே.ராம்குமார் என்பவர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி கடந்த ஆண்டிற்கான குத்தகைத் தொகை ரூ.540225/-யை விட ரூ.9775/- கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரி குத்தகைத் தொகை ரூ.514908/-யை விட ரூ.35092/- கூடுதலாகவும் உள்ளது. எனவே, திரு.கே.ராம்குமார் என்பவரது உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 339, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | நகராட்சிக்கு கூடுதல் வருவாய் ஈட்டும்பொருட்டு மறு பொது ஏலம், ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.7**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதிகள் 2022 (வார்டு குழு மற்றும் பகுதி சபா) ஆணை வெளியிடப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் அலுவலக கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி,

சின்னமனூர் நகர்மன்ற தீர்மான எண்.225, நாள்.21.10.2022 மன்றத்தின் அனுமதி பெற்று இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் வார்டு குழு மற்றும் பகுதி சபா உறுப்பினர்கள் தேர்வு செய்வதற்கு ஒவ்வொரு வார்டுகளில் உள்ள தெருக்களின் விவரங்கள், குடியிருப்புகளின் விவரங்கள் அடங்கிய வரைபடங்கள் (Auto CAD), கையேட்டுப்பதிவேடுகள் மற்றும் பேனர்கள் தயாரிப்பதற்கு நகராட்சியின் மூலம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலைகளின் விவரம்** | **விலை விகிதம் வழங்கிய நிறுவனங்களின் பெயர் மற்றும் விலைவிகிதம்** | |
|---|---|---|---|
| 1 | Auto Cad வரைபடங்கள்ள | திரு.ஆர்.விஜயகுமார் பதிவு பெற்ற கட்டிட வரைவாளர்அம்பிகை கன்ஸ்ட்ரக்சன் சின்னமனூர் **ரூ.64000/- (குறைவு)** | திரு.எல்.மணிகண்ட பாண்டியன் பதிவு பெற்ற கட்டிட வரைவாளர் **ரூ.70000/-** |
| 2 | கையேட்டு பதிவேடுகள் | 1)ஒலிம்பிக் ஜெராக்ஸ் பைபாஸ், மெயின்ரோடு, உத்தமபாளையம் **ரூ.31350/-(குறைவு)** | 2)தேஜா புக் ஸ்டோர்ஸ் 28/5, அக்ரஹாரம், சின்னமனூர் **ரூ.32340/-** |
| 3 | பேனர்கள் | குயின் பிளக்ஸ் வடக்கு ரதவீதி சின்னமனூர் **ரூ.17550/-(குறைவு)** | யோகா பிளக்ஸ் 456, மெயின்ரோடு உத்தமபாளையம்- **ரூ.18900/-** |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** : - | மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனங்கள் மூலம் பணி செய்து முடித்ததை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3780/2021/அ4) |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 340, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.8**

சின்னமனூர் நகராட்சியில் நடப்பு 2022–2023ம் கல்வியாண்டில் சின்னமனூர் நகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர் தினகரன் நாளிதழைப் படித்து பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு சலுகை விலையில் தினசரி நாளிதழ் பள்ளிகளுக்கு விநியோகம் செய்ய மேற்படி நிறுவன பொது மேலாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இதன்படி, நகராட்சி துவக்கப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள் மற்றும் உயர்நிலை பள்ளிகளில் (மொத்தம் 7 பள்ளிகள்) பயிலும் மாணவர்களின் வாசிப்பு திறன், பொது அறிவு போன்ற திறன்களை மேம்படுத்தும்பொருட்டு, மேற்படி தினசரி நாளிதழ்கள் விநியோகம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** : - | அனுமதிக்கலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 341, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.9**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 24.08.2022ம் நாளிட்ட அரசாணை எண்.116 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 21.10.2022ம் நாளிட்ட 266ம் எண் தீர்மானத்தின்படி, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு நகர்புற உள்ளாட்சிகளால் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மற்றும் வாகனங்களை இயக்கும் பணிகளை ஒப்பந்தப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் செயல்திறன் அடிப்படையில் தொகை வழங்க கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 10.01.2023ம் தேதிய செயல்முறை ஆணை ந.க.எண்.32945/2022/E**A2-SWM-10** உத்திரவில் சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளின் கீழ் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் குப்பைகளை தேவையான பணியாளர்கள், தளவாடச்சாமான்கள் மற்றும் வாகனங்கள் பயன்படுத்தி மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்துப்பெற்று அதனை இந்நகராட்சியில் செயல்படும் உரமாக்கும் மையம்(MCC) மறுசுழற்சி மையம் (RRC) மற்றும்கழிவு வளர்ப்பு மீட்பு மையம் (MRF) ஆகிய இடங்களுக்கு கொண்டு வர நாள் ஒன்றுக்கு சேகரம் ஆகும் கழிவு **15.19** மெட்ரிக்டன் ஒரு டன்னிற்கு ரூ.4125.62 வீதம் நாள் ஒன்றுக்கு அடிப்படை செலவு ரூ.0.63 இலட்சம் நிர்ணயம் செய்தும், ஆண்டிற்கு மதிப்பிடப்பட்ட செலவு தொகை ரூ.273.64/- இலட்சம் (அடிப்படை செலவு ரூ.229.95 இலட்சம் +18% சேவை வரி 1% தொழிலாளர்

நலநிதி ரூ.43,69 இலட்சம் உட்பட) நிர்ணயம் செய்து, நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி உத்திரவில் மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியும், ஒப்பந்த நிறுவனம் / ஒப்பந்ததாரருக்கு முதல் ஆண்டிற்கு உத்திரவு வழங்கியும், அடுத்து வரும் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளுக்கு ஒப்பந்த நிறுவனம் / ஒப்பந்ததாரரின் செயல்திறன் அடிப்படையில் மன்றத்தின் இசைவு பெற்று பணிமேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

இப்பணிக்கான மேற்காணும் செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பொது நிதி பற்றாக்குறை இருப்பின் 15வது மத்திய நிதி குழுமானியம் – திடக்கழிவு மேலாண்மை – நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளியினை நாளிதழில் விளம்பரம் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு :-** | மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.9260/2022/எச்1) |
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 342, நாள்.25.01.2023 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சியின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தேவையான குளோரின் சிலிண்டர்கள் விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.327, நாள்.30.12.2022 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து, 20.01.2023ம் தேதியன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **விவரம்** | **தொகை ரூ.பை ( ஒரு எண்ணம்)** |
|---|---|---|
| 1. | ஸ்ரீ சத்யா டைஸ் & கெமிக்கல்ஸ், ஆண்டிப்பட்டி | ரூ.33276/- ( GST உட்பட) |
| 2. | பியூப்பில் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ், ஆண்டிப்பட்டி | ரூ.33630/- ( GST உட்பட) |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு :-** | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்காணும் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் |

| | |
|---|---|
| | வரிசை எண்.1-இல் காணும் ஆண்டிப்பட்டி ஸ்ரீ சத்யா டைஸ் & கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2381/2011/இ2) |
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 343, நாள்.25.01.2023 |
| **தீர்மானம் :** | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் Desilting Auto Vehicle No.TN60Q4963-க்கு FC எடுப்பதற்கு சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.326, நாள்.30.12.2022 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து, 20.01.2023ம் தேதியன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை ரூ.பை |
|---|---|---|
| 1. | பெருமாள் டிராக்டர் ஒர்க்ஸ், சின்னமனூர் | ரூ.45700/- |
| 2. | ஸ்ரீ சிவகாமி லேத் அன்ட் வெல்டிங் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,. சின்னமனூர் | ரூ.47700/- |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு :-** | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்காணும் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1-இல் காணும் சின்னமனூர் பெருமாள் டிராக்டர் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3462/2017/இ2) |
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 344, நாள்.25.01.2023 |
| **தீர்மானம் :** | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் Desilting Auto Vehicle

No.TN60Q4981-க்கு FC எடுப்பதற்கு சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.325, நாள்.30.12.2022 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து, 20.01.2023ம் தேதியன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை ரூ.பை |
|---|---|---|
| 1. | பெருமாள் டிராக்டர் ஒர்க்ஸ், சின்னமனூர் | ரூ.36100/- |
| 2. | ஸ்ரீ சிவகாமி லேத் அன்ட் வெல்டிங் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,, சின்னமனூர் | ரூ.38125/- |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு :-** | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்காணும் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1-இல் காணும் சின்னமனூர் பெருமாள் டிராக்டர் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3245/2017/இ2) |
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 345, நாள்.25.01.2023 |
| **தீர்மானம் :** | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண்.13**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.22, தினசரி மார்க்கெட் தெரு, சீப்பாலக்கோட்டை ரோடு தெற்குப் புறத்தில் அமைந்துள்ள சிறுபாலம் மிகவும் சேதமடைந்து பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதி சேதமடைந்த சிறுபாலத்தினை சரி செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2.30ற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு :-** | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 346, நாள்.25.01.2023 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.14**

| | |
|---|---|
| இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10, அய்யன் கோவில் தெருவில் அமைந்துள்ள பழுதடைந்துள்ள அடிகுழாயினை சீரமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைத்து பொது மக்களுக்கு தங்கு தடையில்லா தண்ணீர் வழங்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1.80 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து எம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 347, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |
| **பொருள் எண்.15**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24, முத்துலாபுரம் ரோட்டில் அமைந்துள்ள குப்பமுத்து சுவாமி கோவில் அருகில் பழுதடைந்துள்ள அடிகுழாயினை சீரமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைத்து பொது மக்களுக்கு தங்கு தடையில்லா தண்ணீர் வழங்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1.80 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து எம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது | |
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 348, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |
| **பொருள் எண்.16**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26, அங்கு விலாஸ் ரைஸ்மில் தெருவில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் சிதலமடைந்து கழிவு நீர் தேங்குவதால் பொது மக்களுக்கு சுகாதாரக் கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சேதமடைந்த மழைநீர் வடிகாலினை சரி செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| | 2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 349, நாள்.25.01.2023 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |
| **பொருள் எண்.17**<br>இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.5, காந்தி நகர் காலனி பகுதியில் மிகவும் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள மூன்று சிறு பாலங்களை பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சேதமடைந்துள்ள மூன்று சிறுபாலங்களை சரி செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு :-** | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 350, நாள்.25.01.2023 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |
| **பொருள் எண்.18**<br>இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சியில் பல பகுதிகளில் உடைந்து பழுதடைந்துள்ள Manhole -யினை சீரமைக்கும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு :-** | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப குடிநீர் மற்றும் வடிகல் நிதியில் மேற்கொள்ளலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 351, நாள்.25.01.2023 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |
| **பொருள் எண்.19** | |

| | |
|---|---|
| இந்நகராட்சிக்குச் சொந்தமான பொன் நகர் சமுதாய கூடத்தில் உள்ள ஆழ்துளை கிணறு பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளதால் மேற்படி ஆழ்துளை கிணற்றில் ஏற்பட்டுள்ள பழுதினை சரி செய்யும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,90,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப குடிநீர் மற்றும் வடிகல் நிதியில் மேற்கொள்ளலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 352, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |
| **பொருள் எண்.20**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22, தினசரி மார்க்கெட் தெரு, உழவர் சந்தை அருகில் உள்ள சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்து பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே உழவர் சந்தை சென்று வரும் பொது மக்களின் நலன் கருதி சேதமடைந்த மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்தினை சரி செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 353, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |
| **பொருள் எண்.21**<br>இந்நகராட்சிக்குச் சொந்தமான கல்யாண மண்டபம் நகராட்சி பள்ளி மற்றும் வடக்கு அய்யன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை மெயின் பைப் பழுதடைந்துள்ள காரணத்தினால் பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி பாதாள சாக்கடை திட்ட மெயின் பைப்பினை சீர் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| | 2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப குடிநீர் மற்றும் வடிகல் நிதியில் மேற்கொள்ளலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 354, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.22**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.25, பத்மநாபசாமி கோவில் தெருவில் உள்ள சிறுபாலம் மிகவும் சேதமடைந்து இருசக்கர வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சேதமடைந்துள்ள சிறுபாலத்தினை சரி செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1.20 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 355, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.23**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பொன்னகர், சாமிகுளம், காந்தி நகர் காலனி 5வது தெரு மற்றும் சந்தைப்புதூர் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பிடங்களில் நவீன முறையில் பொது மக்கள் பயன்படுத்தும் விதமாக சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 356, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

| |
|---|
| ******* |

**பொருள் எண்.24**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வண்டிப்பேட்டை, சொக்கநாதபுரம், சீப்பாலக்கோட்டை ரோடு, விஸ்வன்குளம், காளவாசல் தெரு, ஓத்தவீடு மற்றும் அய்யனார்புரம் ஆகிய பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பிடம் மற்றும் பொதுக் கழிப்பிடங்களில் நவீன முறையில் பொது மக்கள் பயன்படுத்தும் விதமாக சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** : - | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 357, நாள்.25.01.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

(ஒப்பம்) திருமதி.ரா.அய்யம்மாள்

நகர்மன்றத் தலைவர்

சின்னமனூர் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்

சின்னமனூர் நகராட்சி.